A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 81 / 2024**

திரு M. பாபுஜி,
டேவிட் நாடார் காம்பளக்ஸ்,
கூறைநாடு, மயிலாடுதுறை – 609 001.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு S. நீலகண்டபிள்ளை)

எதிர்

1) உதவி மின்பொறியாளர்/ இ&ப /நகர்/மேற்கு/மயிலாடுதுறை,
நாகை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
மயிலாடுதுறை டவுன் ஸ்டேசன் ரோடு,
மயிலாடுதுறை – 609 001.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / நகரம்/மயிலாடுதுறை,
நாகை மின் பகிர்மான வட்டம்/நாகப்பட்டினம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
மயிலாடுதுறை டவுன் ஸ்டேசன் ரோடு,
மயிலாடுதுறை – 609 001.

3) செயற்பொறியாளர்/ இ&ப / மயிலாடுதுறை,
நாகை மின் பகிர்மான வட்டம்/நாகப்பட்டினம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
எண். 11, பட்டமங்கலம் தெரு, மயிலாடுதுறை – 609 001.

. . . எதிர்மனுதாரர்கள்

(திரு K. செந்தில்குமார், உதவி மின்பொறியாளர்/ இ&ப /நகர்/மேற்கு/மயிலாடுதுறை
திரு T. கலியப்பெருமாள், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / நகரம்/மயிலாடுதுறை
திரு S. செந்தில்நாதன், செயற்பொறியாளர்/ இ&ப / மயிலாடுதுறை)

**மனு பெறப்பட்ட நாள்: 25-11-2024**

**கேட்புரை நாள்: 09-01-2025**

**ஆணை நாள்: 27-01-2025**

25.11.2024 அன்று பெறப்பட்ட திரு M. பாபுஜி, டேவிட் நாடார் காம்பளக்ஸ், கூறைநாடு, மயிலாடுதுறை – 609 001 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 81/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 09.01.2025 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது மின் இணைப்பு எண் 521-007-405-இல் கூடுதல் மின்பளு பயன்படுத்தியதற்காக விதிக்கப்பட்ட வளர்ச்சி கட்டணத்தை தள்ளுபடி செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது மின் இணைப்பு எண் 521-007-405-இல் கூடுதல் மின்பளு பயன்படுத்தியதற்காக விதிக்கப்பட்ட வளர்ச்சி கட்டணத்தை தள்ளுபடி செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் உபயோகத்தால் நுகர்வு கணக்கீட்டு தரவுகளின்படி 2kw-க்கு மேல் உபயோகப்படுத்தப்பட்டதால் உரிய வளர்ச்சி கட்டணத்திற்குரிய தொகை விதிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் நாகை மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 21.02.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், நாகை மின் பகிர்மான வட்டம், 16.09.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 நாகை மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 16.09.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *மனுதாரர் குறிப்பிட்டுள்ள மயிலாடுதுறை மேற்கு பிரிவிற்குட்பட்ட மின் இணைப்பில் (521– 007–405) நுகர்வு கணக்கீட்டு தரவுகளின் படி 07/2016 241KW 07/2017.205KW மற்றும் 09/2017. 205KW மாதங்களில் மின்பளு 2KW க்கு மேல் உபயோகப்படுத்தப்பட்டதால் Load regularization based on Recorded MD விதிகளின் படி மின் பளு 3kW வாக உயர்த்தபட்டது சரியே என்று இம்மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் கருதுகிறது. மேலும் அனுமதிக்கப்பட்ட மின் பளுவை விட நுகர்வோர் மின் நுகர்வு செய்யும் பொழுது அதற்குரிய வளர்ச்சி கட்டணம் மற்றும் நிலைக்கட்டணங்களை வசூலிப்பதும் மின் வாரிய விதிமுறைகளின் படி முறையானது என்றும், மின் இணைப்புகளில் முந்தைய காலங்களில் வரவு வைக்கப்படாத மின் கட்டணத் தொகைகள் கணினி ஆய்வின் போதோ, தணிக்கையின் போதோ கண்டறியப்பட்டால் (6 வருடங்களுக்கு பிறகும்) அதனை வசூலிக்க எவ்வித தடையும் இல்லை என்று வாரிய சுற்றறிக்கை Lr.No CFC/FC.R.D.No,Dt.1110.2011 இல் குறிப்பிட்டுள்ளதை இம்மன்றம் இவ்விடத்தில் பதிவு செய்து நுகர்வோர் குறைதீர் மன்றம் இம்மனுவை இத்துடன் முடித்து வைக்கிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 09.01.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு S. நீலகண்டபிள்ளை அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு K. செந்தில்குமார், உதவி மின்பொறியாளர்/ இ&ப /நகர்/மேற்கு/மயிலாடுதுறை, திரு T. கலியப்பெருமாள், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / நகரம்/மயிலாடுதுறை மற்றும் திரு S. செந்தில்நாதன், செயற்பொறியாளர்/ இ&ப / மயிலாடுதுறை, நாகை மின் பகிர்மான வட்டம், ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 ஆரம்பத்தில் கேட்ட போது டெபாஸிட் தொகை என ஒரு தவறான தகவலை தந்ததாகவும், உடன் கடிதம் மூலம் செல் மூலம் உதவி பொறியாளரிடம் கோரிய போது, இது கூடுதல் மின்பளு எனவும், மேலும் மேற்பார்வை பொறியாளர்/நாகை உத்தரவு என்று கூறியதாகவும், தனது மனுவிற்கு எந்த விளக்கம் கால கெடு ஏதும் தராது மின் இணைப்பு 30–5–2023 அன்று துண்டிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேற்படி கடை 2019 கொரானா காலத்தில் காலி கடை இதனால் வாடகைக்கு விட முடியாத நிலையை மின் வாரிய துண்டிப்பு தனக்கு ஏற்படுத்தியது, வருவாய் இல்லாது நகராட்சிக்கு வரியை மட்டும் கட்டும் நிலைக்கு தள்ளி பொருளாதார இழப்பையும் தனக்கு மின் கழகம் ஏற்படுத்தியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 தன் வழக்கில் ஆறு வருடங்கள் எந்த மின் பயன்பாடு செய்யாது மின் கழகத்திற்கு இணைப்பு கட்டணம் என தான் வருவாயை தந்துள்ளதாகவும், மின் கழகத்தின் எந்த மின் சேவையும் பயன்படுத்தாது ஐந்தாண்டுகள் கட்டணம் செலுத்திய தனக்கு, MD ரிவிஷன் 6 வருடம் கழித்து முன் எனக் காரணம் கூறி தண்டிப்பது நியாயமா, அடுத்த பில் முன் நோட்டீஸ் வர வேண்டும் ஆறு வருடம் மினிமம் பெற்று வந்த நிலையில் பணம் கட்ட போன இறுதியில் கேட்டு, மினிமம் தொகை மறுத்து, தனது கடிதம் மறுத்து மின் துண்டிப்பு செய்த தவறுக்கு தான் பொருப்பல்ல எனவும், 2003ல் சென்னை உயர் நீதி மன்ற உத்தரவுபடி நோட்டீஸ் தந்த பிறகே எந்த மின் துண்டிப்பும் செய்ய வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 அந்த கடை பயன்பாட்டாளர் கடையை காலி செய்து போய் ஐந்தாண்டுகள் கடந்த நிலையில் கோரும் மின் கழகம் அந்த விதியை தனக்கு தந்தல்லவா கோரியிருக்க வேண்டும் எனவும், எந்த முன் அறிவிப்பும் தராது மின் துண்டிப்பு செய்து தனக்கு அநீதி செய்துள்ளதாகவும், மனித உரிமை நியாயம் மீறி நுகர்வோரை நஷ்டப்படுத்தியுள்ளதாகவும், எந்த ஆதாரமாக எந்த தகவலும் தராது ஒரு நுகர்வோரை இருட்டில் வைத்து, மினிமம் கட்ட போன போது, மனித உரிமை மீறிய செயலாகவும், வாங்க மறுத்தும் மறுநாளே மின் துண்டிப்பு செய்து மூத்த 74 வயதான குடிமகனுக்கு வருவாய் இழப்பையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேலும் பிறகு தங்கள் மேல்முறையீடு உத்திரவு நகலை 14-11-24 தேதி எடுத்து சென்று 25 சதவீத கட்டணம் கட்ட R S இடம், கௌண்டரிலும், AE யும் மறுப்பது பற்றி கோரிய போது அதற்கு மின் சட்டத்தில் இடமில்லை எனக் கூறிவிட்டதாகவும், தான் ADE க்கு செல்லில் பேசியபோது நான் விடுப்பில் உள்ளேன் நாளை வரக் கூறியதாகவும், மறுநாள் சென்ற போது ADE கூறியும் RS வாங்க மறுத்துவிட்டதாகவும், உடன் EE இடம் செல்லில் எங்கே கட்டுவது எனக் கோரியதற்கு கௌன்டரில் தான் எனக் கூறி மீண்டும் போக கூறியதாகவும், 15-11-2024 தேதி திரும்ப சென்று கோரிய போதும் மறுத்து விட்டதாகவும், உடன் SE/நாகைக்கு செல்லில் தகவல் கூறியதாகவும், நாளை போங்கள் EE இடம் பேசுவதாக கூறியதாகவும், அதன் பேரில் 16-11-24 சென்ற போதும் மறுத்து விட்டதாகவும், உடன் EE செல்லில் பேச, அவரும் போக கூறியதாகவும், மீண்டும் திரும்ப சென்ற போது நாகையில் கேட்டு தான் வாங்க முடியும், உடன் SE க்கு மெயில் போட்டேன் இணைப்பில் காணலாம். கடும் மழையில் தனது உதவியாளர் அலைந்து வந்து விட்டதாகவும், பிறகு போன் செய்து அழைத்ததாகவும், அவர் வேறு வேலையாக சென்று விட்டதாகவும், தாங்கள் அந்த பணத்தை கட்டி விட்டதாகவும், வந்து வாங்கி போக கூறியுள்ளதாகவும், கடும் மழை நேரம் கடந்ததால் மறு நாள் போய் வாங்கி வந்ததோம் மூன்று தினமும் மயிலாடுதுறையில் கடும் மழை ஒரு நுகர்வோரை எந்த அளவுக்கு சிரமத்திற்கு ஆளாக்கியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மின்வாரிய சட்டபிரிவு 56 ல் படி 15 நாள் நோட்டீஸ் கொடுத்து விளக்கம் கேட்ட பின்பே மின் இணைப்பு துண்டிக்க வேண்டும் தகவல் அறியும் தகவல் படி, அந்த ஒரு வருட கணக்கில் கூடுதல் கிவோ பயன்பாடு என்றால் அந்த வருட சராசரி பார்த்து கூடுதல்

டெபாஸிட் கோர வேண்டும் எனவும், மூன்று வருடம் எந்த கூடுதல் பயன்பாடு இல்லை அதை திரும்ப தர வேண்டும் எனவும், இங்கு ஆறு வருடம் மினிமம் கூடுதல் பயன்பாடு கேள்வியே இல்லை, ஆனால் அதை கோரி மின் இணைப்பு துண்டிப்பு செய்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 ஆகவே மனித உரிமை மீறிய செயலாக துண்டிப்பு செய்தது, ஆணைய கூறிய கட்டணம் வாங்க மறுத்து ஒரு மூத்த 74 வயதான குடி மகனை வருவாய் இழப்பையும், அலைச்சல், மன உளச்சல், மன தளர்ச்சி என ஏற்படுத்தியதற்கு மின் கழகம் தனக்கு ரூ5,00,000/– இழப்பீடு பரிகாரம் தர உத்தரவிடுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மயிலாடுதுறை கோட்டம், மயிலாடுதுறை/நகர்/மேற்கு பிரிவுக்கு உட்பட்ட மின் இணைப்பு எண் 521–007–405ல் நுகர்வோர் திரு.பாபுஜி அவர்கள் 1KW மின் பளுக்கான வணிக மின் இணைப்பு பெற்று பயன்படுத்தி வந்திருப்பதாகவும், கடந்த 07/2016, 05/2017, 07/2017 மற்றும் 09/2017 மாதங்களில் மின்பளு 2KW க்கு மேல் உபயோகப்படுத்தப்பட்டதால் கணினியில் Load regularization based on Recorded MD listல் மேற்கண்ட மின்இணைப்பு எண் 521–007–405 இருந்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 நிலுவையில் இருந்த Load regularization based on Recorded MD Listல் இருந்த அனைத்து மின் இணைப்புகளும் 04/2023 மாதத்தில் Upload செய்யப்பட்டதாகவும், அப்போது 521–007–405 மின்இணைப்பின் மின்பளு 1KW லிருந்து 3KW க்கு உயர்ந்ததால் அதற்குரிய வளர்ச்சி கட்டணம் ரூபாய் 4413/–க்கான Auto slip No: 52120231471, 21–04–2023 அன்று கணினியில் ஏறியுள்ளதாகவும், 30–05–2023 அன்று நுகர்வோர் மேற்கண்ட மின் இணைப்பின் கூடுதல் மின்கட்டணத்தை ரத்து செய்ய கடிதம் அளித்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 நுகர்வோரின் உபயோகத்தால் உயர்த்தப்பட்ட 2KWக்கான உரிய வளர்ச்சி கட்டணம் ரூபாய் 4413/05/2023 க்கான நிலையான கட்டணம் ரூபாய் 600/–சேர்த்து

கூடுதல் ரூ 5013/- செலுத்த 31-05-2023 அன்று நுகர்வோருக்கு பதிவுதபால் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேற்கண்ட நுகர்வோர் 07/2016, 05/2017 07/2017 மற்றும் 09/2017 ஆகிய மாதங்களில் அனுமதிக்கப்பட்ட மின்பளுவைவிட கூடுதல் மின்பளு உபயோகப்படுத்தி அதற்கு அபராத தொகையும் செலுத்தியுள்ளதாகவும், அந்த காலகட்டத்தில் மென்பொருள் மாற்றம் (R-APDRP Scheme) நடைபெற்று கொண்டிருந்ததால் நுகர்வோரால் உபயோகப்படுத்தப்பட்ட கூடுதல் மின்பளு Load regularization based on Recorded MD என்ற முறையில் Update செய்யப்படாமல் நிலுவையில் இருந்ததாகவும், மேற்கண்ட நுகர்வோருக்கு 11/2017 மாதத்தில் நுகர்வோரின் உபயோகத்தால் உயர்த்தப்பட்ட 2KWக்கான உரிய வளர்ச்சி கட்டணம் மற்றும் அதன் தொடர்ச்சியாக கணக்கீடு செய்த மாதங்களுக்கு 3KWக்கு உண்டான நிலையான கட்டணம் வசூல் செய்யப்பட்டிருக்கப்பட வேண்டும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 நிலுவையில் இருந்த Load regularization based on Recorded MD List-ல் இருந்த அனைத்து மின் இணைப்புகளும் 04/2023 மாதத்தில் Upload செய்யப்பட்டதாகவும், அப்போது 521-007-405 மின்இணைப்பின் மின்பளு 1kW லிருந்து 3KW க்கு உயர்ந்ததால் 3 KW க்குண்டான வளர்ச்சிகட்டணம் மற்றும் நிலையான கட்டணம் ரூபாய் 4413/-க்கான Autoslip No: 52120231471, 21-04-2023 அன்று கணினியில் ஏறியுள்ளதாகவும், அப்போது நுகர்வோருக்கு பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணுக்கு குறுந்தகவல் மென்பொருள் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 கடை பயன்பாட்டாளர் கடையை பயன்படுத்தும்போதே உரிமையாளர் பெற்ற மின்பளுவைவிட கூடுதல் மின்பளு 07/2016, 05/2017, 07/2017 மற்றும் 09/2017 ஆகிய மாதங்களில் பயன்படுத்தி அதற்குரிய அபராத்தொகையும் செலுத்தியுள்ளதாகவும், கடை உரிமையாளர் வாடகைக்கு இருப்பவர்களின் தேவைக்கேற்ப கூடுதல் மின்பளு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 521-007-405 மின்இணைப்பின் மின்பளு 1KW லிருந்து 3KW க்கு உயர்ந்ததால் 2KW க்குண்டான வளர்ச்சிகட்டணம் மற்றும் பரிசோதனை கட்டணம் ரூபாய் 4413/-

க்கான Autoslip No: 52120231471 21-04-2023 அன்று மென்பொருள் மூலம் ஏற்றப்பட்ட தகவல் நுகர்வோருக்கு பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணுக்கு குறுந்தகவல் மென்பொருள் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், 08-05-2023 அன்று 05/2023 மாத கணக்கீடு ரூபாய் 600/- பதிவு செய்யப்பட்டு அதற்குறிய அபராதம் இல்லாமல் மின் கட்டணம் செலுத்த கடைசி தேதி குறிப்பிட்டு 08-05-2023 அன்று மென்பொருள் மூலம் நுகர்வோருக்கு பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணுக்கு குறுந்தகவல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 30-05-2023 அன்று நுகர்வோர் மேற்கண்ட மின் கட்டணம் சம்பந்தமாக அனுப்பிய கடிதத்திற்கு நுகர்வோரின் உபயோகத்தால் உயர்த்தப்பட்ட 2KWக்கான உரிய வளர்ச்சி கட்டணம் ரூபாய் 4413/-, 05/2023 க்கான நிலையான கட்டணம் ரூபாய் 600/- சேர்த்து கூடுதல் ரூ.5013/- செலுத்த 31-05-2023 அன்று நுகர்வோருக்கு பதிவு தபால் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக மின் கட்டணத்தை உரிய காலத்திற்குள் செலுத்தாததால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதிகளின்படி 09-06-2023 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 14-11-2024 மற்றும் 15-11-2024 ஆகிய இருதினங்களில் 521-007-405 மின் இணைப்பிற்கு மின்குறைதீர்ப்பாளர் உத்தரவுபடி நுகர்வோர் செலுத்தவேண்டிய மின் கட்டணத்தில் 25% தொகையை மின் துண்டிப்பில் உள்ள மேற்கண்ட மின் இணைப்பு கணக்கில் செலுத்த மென்பொருளில் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும், அவ்வாறு செய்ய இயலாததால் மேல் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று 16-11-2024 அன்று நுகர்வோர் பெயரில் தனியாக பில் போடப்பட்டு நுகர்வோரின் உதவியாளரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், மேற்கண்ட விவரங்கள் யாவும் பில் செலுத்த வந்த நுகர்வோரின் உதவியாளரிடம் விவரமாக தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 நுகர்வோரின் உபயோகத்தால் உயர்த்தப்பட்ட 2KWக்கான உரிய வளர்ச்சி கட்டணம் ரூபாய் 4413/- க்கான Autoslip No: 52120231471, 21-04-2023 அன்று

மென்பொருள் மூலம் ஏற்றப்பட்டது வைப்புதொகை (டெபாஸிட்) தொகை எதுவும் கோரப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தான் ஆரம்பத்தில் கேட்ட போது வைப்புத் தொகை என ஒரு தவறான தகவலை தந்ததாகவும், உடன் கடிதம் மூலம் உதவி பொறியாளரிடம் கோரிய போது, இது கூடுதல் மின்பளு எனவும், தனது மனுவிற்கு எந்த விளக்கம், கால கெடு ஏதும் தராது மின் இணைப்பு 30-05-2023 அன்று துண்டிக்கப்பட்டதாகவும், தன் வழக்கில் ஆறு வருடங்கள் எந்த மின் பயன்பாடும் செய்யாது மின் கழகத்திற்கு இணைப்பு கட்டணம் என தான் வருவாயை தந்துள்ளதாகவும், மின் கழகத்தின் எந்த மின் சேவையும் பயன்படுத்தாது ஐந்தாண்டுகள் கட்டணம் செலுத்திய தனக்கு, MD முறைப்படுத்தல் 6 வருடம் கழித்து முன் எனக் காரணம் கூறி தண்டிப்பது நியாயமா என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மின்வாரிய சட்ட பிரிவு 56 ன் படி 15 நாள் நோட்டீஸ் கொடுத்து விளக்கம் கேட்ட பின்பே மின் இணைப்பு துண்டிக்க வேண்டும் எனவும், அந்த ஒரு வருட கணக்கில் கூடுதல் கிவோ பயன்பாடு என்றால் அந்த வருட சராசரி பார்த்து கூடுதல் டெபாஸிட் கோர வேண்டும் எனவும், மூன்று வருடம் எந்த கூடுதல் பயன்பாடும் இல்லை அதை திரும்ப தர வேண்டும் எனவும், இங்கு ஆறு வருடம் மினிமம் கூடுதல் பயன்பாடு கேள்வியே இல்லை, ஆனால் அதை கோரி மின் இணைப்பு துண்டிப்பு செய்ததாகவும், ஆகவே, வருவாய் இழப்பையும், அலைச்சல், மன உளச்சல், மன தளர்ச்சி என ஏற்படுத்தியதற்கு மின் கழகம் தனக்கு ரூ.5,00,000/- இழப்பீடு பரிகாரம் தர உத்தரவிடுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மயிலாடுதுறை கோட்டம், மயிலாடுதுறை/நகர்/ மேற்கு பிரிவுக்கு உட்பட்ட மின் இணைப்பு எண் 521-007-405-இல் நுகர்வோர் திரு.பாபுஜி அவர்கள் 1KW மின் பளுக்கான வணிக மின் இணைப்பு பெற்று பயன்படுத்தி வந்திருப்பதாகவும், கடந்த 07/2016, 05/2017, 07/2017 மற்றும் 09/2017 மாதங்களில்

மின்பளு 2KW க்கு மேல் உபயோகப்படுத்தப்பட்டதால் கணினியில் Load regularization based on Recorded MD list–இல் மேற்கண்ட மின் இணைப்பு எண் 521–007–405 இருந்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்கண்ட நுகர்வோர் 07/2016, 05/2017, 07/2017 மற்றும் 09/2017 ஆகிய மாதங்களில் அனுமதிக்கப்பட்ட மின்பளுவைவிட கூடுதல் மின்பளு உபயோகப்படுத்தி அதற்குரிய அபராத தொகையும் செலுத்தியுள்ளதாகவும், அந்த காலகட்டத்தில் மென்பொருள் மாற்றம் (R–APDRP Scheme) நடைபெற்று கொண்டிருந்ததால் நுகர்வோரால் உபயோகப்படுத்தப்பட்ட கூடுதல் மின்பளு Load regularization based on Recorded MD என்ற முறையில் Update செய்யப்படாமல் நிலுவையில் இருந்ததாகவும், மேற்கண்ட நுகர்வோருக்கு 11/2017 மாதத்தில் நுகர்வோரின் உபயோகத்தால் உயர்த்தப்பட்ட 2KWக்கான உரிய வளர்ச்சி கட்டணம் மற்றும் அதன் தொடர்ச்சியாக கணக்கீடு செய்த மாதங்களுக்கு 3KWக்கு உண்டான நிலையான கட்டணம் வசூல் செய்யப்பட்டிருக்கப்பட வேண்டும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மின்இணைப்பின் மின்பளு 1KW லிருந்து 3KW க்கு உயர்ந்ததால் அதற்குரிய வளர்ச்சி கட்டணம் ரூபாய். 4413/–க்கான Auto slip No: 52120231471, 21–04–2023 அன்று கணினியில் ஏறியுள்ளதாகவும், உயர்த்தப்பட்ட 2KWக்கான உரிய வளர்ச்சி கட்டணம் ரூபாய் 4413/–, 05/2023 க்கான நிலையான கட்டணம் ரூபாய் 600/– சேர்த்து கூடுதல் ரூ. 5013/– செலுத்த நுகர்வோருக்கு பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணுக்கு குறுந்தகவல் மென்பொருள் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலும் 31–05–2023 அன்று நுகர்வோருக்கு பதிவு தபால் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக மின் கட்டணத்தை உரிய காலத்திற்குள் செலுத்தாததால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதிகளின்படி 09–06–2023 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆராய்ந்து, இவ்வழக்கின் பொருள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் கூடுதல் மின்பளு உபயோகப்படுத்தியதற்காக எதிர்மனுதாரரால் விதிக்கப்பட்ட வளர்ச்சி கட்டணம் மற்றும் முறைப்படுத்தப்பட்ட மின்பளு சரியா என்பதை ஆராய விரும்புகிறேன். இது

சம்பந்தமாக ஒரு தாழ்வழுத்த மின்னிணைப்பில் அனுமதிக்கப்பட்ட மின்பளுவை விட கூடுதலாக பயன்படுத்தப்படும் மின்பளுவிற்கு அந்த பிரச்சனைக்குறிய காலத்தில் விதிக்கப்படும் மிகை மின் தேவைக் கட்டணம் குறித்து அறிய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி 5(2) –ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**(2) Excess demand charge***

*Whenever the consumer exceeds the sanctioned demand, excess demand charge shall be:—*

*(i) """""*

*(ii) In case of LT supply,*

*(a) For Domestic and Agricultural category of service, the excess demand charges shall not be applicable.*

*(b) For other categories of LT services with contracted demand equal to or less than 18.6 KW (25 HP), the excess demand charges shall not be applicable where the connected load is equal to or less than the contracted demand.*

*Note: For services with contracted demand less than or equal to 18.6 KW (25 HP), whenever the consumer's connected load exceeds the contracted demand, the licensee shall install meters with demand recording facility and bring the consumer under the scope of excess demand chargeable category. After installation of the meter, if the recorded demand is in excess of contracted demand, the existing demand, shall, after intimation to the consumer, be revised to the level of recorded demand and all relevant charges applicable for extension of additional demand shall be included in the next bill. No excess demand charge is leviable till such time the licensee installs meter with demand recording facility and bring the consumer under the scope of excess demand chargeable category.*

*(c) For the remaining LT services other than those service connections covered in (a) and (b) above, when the contracted demand is in excess of 18.6KW (25HP) and for such of those consumers whose contracted demand is less than 18.6 KW (25HP) but opted for having meters with demand recording facility, the excess demand charges shall be -,*

*(I) Where the recorded demand does not exceed 112 KW, for every KW or part thereof in excess of the sanctioned demand, at the rate of 1% of the total energy charges;*

*(II) """"""""*

*(III) Where the recorded demand exceeds the sanctioned demand for the second and subsequent times,-*

*(A) In case the recorded demand has not exceeded 112 KW, the existing load sanction shall, after intimation to the consumer, be revised within one month of the second occurrence to the level of recorded demand and all the relevant charges applicable to the additional load shall be included in the next bill;"*

7.8 மேற்கண்ட விதி 5(2) (c) (III) (A)ன்படி நுகர்வோரின் மின்னளவியில் பதிவான மின்பளு அனுமதிக்கப்பட்ட மின்பளுவை விட இரண்டாவது முறை மீறும் போது, 112

கி.வா அளவினும் மிகுதியாகாத போது, நுகர்வோருக்கு அறிவிப்பு தெரிவித்த பிறகு நிலவும் சுமை ஒப்பளிப்பை இரண்டாம் முறை நேர்விலிருந்து ஒரு மாதத்துக்குள் பதிவான மின்தேவைக்கு மாற்றி விட்டு கூடுதல் சுமை தருவதற்கு விதிக்கப்படும் அனைத்து கட்டணங்களையும் அடுத்த பட்டியலில் உடன் சேர்க்க வேண்டும் எனவும் அறிய முடிகிறது.

7.9 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் 07/2016, 05/2017, 07/2017 மற்றும் 09/2017 ஆகிய மாதங்களில் அனுமதிக்கப்பட்ட மின்பளுவைவிட கூடுதல் மின்பளு உபயோகப்படுத்தியதும் அதற்கான அபராத தொகையை செலுத்தியதும் தெரியவருகிறது. இருப்பினும் எதிர்மனுதாரர் கூடுதல் மின்பளு பயன்படுத்திய 2016, 2017 காலகட்டத்தில் அதற்கான அறிவிப்பு கடிதம் வழங்காமல் 04/2023–இல் தான் கூடுதல் மின்பளுவை முறைப்படுத்தி அதற்கான வளர்ச்சி கட்டணத்தை விதித்துள்ளது தெரியவருகிறது. இதை எதிர்மனுதாரர் தனது வாதுரையில் 11/2017 கணக்கீட்டு காலத்திற்கு முன்பே முறைப்படுத்தி வசூலித்திருக்க வேண்டும் என ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். ஆனால் 04/2023–இல் தான் தானியங்கி அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மேற்கூறிய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதிக்கு முரணாக உள்ளது.

7.10 எனவே, மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் 2016 மற்றும் 2017 காலகட்டத்தில் உபயோகப்படுத்திய கூடுதல் மின்பளுவிற்கு 2023–இல் அதனை முறைப்படுத்தியதை இரத்து செய்து ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மின்பளுவையே தொடருமாறு எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

7.11 மேலும் மேல்முறையீட்டாளரின் நுகர்வோர் பேரேட்டை ஆராயும்போது அவருடைய மின் இணைப்பில் 01/2019–லிருந்து 03/2023 வரை உள்ள காலகட்டத்தில் மின்பயன்பாடு இல்லாமல் குறைந்தபட்ச கட்டணத்தையே செலுத்திவந்ததன் மூலம் அந்த மின் இணைப்பில் மின்பயன்பாடு இல்லை என்பதும் அவருடைய 30.05.2023 நாளிட்ட ஆவணத்தில் குறைந்தபட்ச தொகை செலுத்த அனுமதி கோரியதும் தெரியவருகிறது. ஆகவே வருவாய் இழப்பானது என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையதாக இல்லை.

7.12 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் மின்பளு முறைபடுத்த எதிர்மனுதாரரால் கோரிய கேட்புத் தொகை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதிக்கு முரணாக இருப்பதால் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பை துண்டித்திருக்கும் செயல் தவறு என்று முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, கேட்புத் தொகை ரூபாய் 5,013/- தள்ளுபடி செய்யப்படுகிறது. மேலும், மேல்முறையீட்டாளருக்கு துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு உடனே மறு இணைப்பு வழங்க ஆணையிடப்படுகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் முன்பணமாக செலுத்திய 25 சதவீத கேட்புத் தொகையும் திருப்பி வழங்குமாறு உத்திரவிடபடுகிறது.

7.13 மேல்முறையீட்டாளரின் அடுத்த கோரிக்கையான தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு ரூ.5,00,000/- வழங்குமாறு கோரியுள்ளார். இது சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> "*7. ......................*
>
> *.............................*
>
> *(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

7.14 மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது. எனவே, ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு

மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் வழிவகை இல்லை என்று தெரிகிறது.

8.0 முடிவுரை:

8.1 மேல்முறையீட்டாளரின் கோரிக்கையின் அடிப்படையில் கூடுதல் மின்பளு தவறாக முறைப்படுத்தப்பட்டது அறியப்பட்டதால் அதற்கான அறிக்கையை இரத்து செய்து ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மின்பளுவையே தொடருமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது. இது சம்பந்தமாக கோரப்பட்ட கேட்புத் தொகை ரூபாய் 5,013/– தள்ளுபடி செய்யப்படுவதுடன் மேல்முறையீட்டாளரின் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை உடனே மறு இணைப்பு வழங்க ஆணையிடப்படுகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் முன்பணமாக செலுத்திய 25 சதவீத கேட்புத் தொகையும் தமிழ்நாடு மின்வழங்கல் விதியின்படி திரும்ப வழங்குமாறு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுகளை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை எதிர்மனுதாரர் இந்த தீர்வு கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

8.3 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 81/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

(ந. கண்ணன்)
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்:

1. திரு M. பாபுஜி, – By RPAD
டேவிட் நாடார் காம்பளக்ஸ்,
கூறைநாடு, மயிலாடுதுறை – 609 001.

2. உதவி மின்பொறியாளர்/ இ&ப /நகர்/மேற்கு/மயிலாடுதுறை,
நாகை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
மயிலாடுதுறை டவுன் ஸ்டேசன் ரோடு,
மயிலாடுதுறை – 609 001.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&ப / நகரம்/மயிலாடுதுறை,
நாகை மின் பகிர்மான வட்டம்/நாகப்பட்டினம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
மயிலாடுதுறை டவுன் ஸ்டேசன் ரோடு,
மயிலாடுதுறை – 609 001.

4. செயற்பொறியாளர்/ இ&ப / மயிலாடுதுறை,
நாகை மின் பகிர்மான வட்டம்/நாகப்பட்டினம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
எண். 11, பட்டமங்கலம் தெரு, மயிலாடுதுறை – 609 001.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
நாகபட்டிணம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
சாட்டையப்பர் கிழக்கு தெரு, நாகப்பட்டிணம் – 611 001.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.